மண்டல நிர்வாக இயக்குநர்
திருப்பூர்
9 MAY 2005

<u>மின் அஞ்சல்</u>

நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை–5.

<u>ந.க.எண்.59077/2003/ஆர்2</u> <u>நாள்: 12.4.2005</u>

<u>சுற்றறிக்கை</u>

பொருள்: வாடகை – நகராட்சிகள் – நகராட்சிக்கு சொந்தமான கடைகளை அரசு / அரசு சார்பு நிறுவனங்களுக்கு பொது ஏலம் தவிர்த்து வாடகைக்கு விடுவது – வாடகை நிர்ணயம் செய்ய பிரேரணை அனுப்புவது – மண்டல செயற் பொறியாளர் ஒப்புதல் பெற அறிவுறுத்தப்படுவது – குறித்து.

***

நகராட்சிகளுக்கு சொந்தமான கடைகள் / கட்டிடங்களை அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்களுக்கு பொது ஏலம் தவிர்த்து வாடகைக்கு விடுவது மற்றும் வாடகை நிர்ணயம் செய்வது தொடர்பாக பிரேரணைகள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பும்போது மண்டல செயற் பொறியாளர் அவர்களின் ஒப்புதல் இல்லாமலும், பிரேரணை முழு வடிவில் இல்லாமலும் அனுப்பப்படுகின்றன.

எனவே, இனி வருங்காலங்களில் பொது ஏலம் தவிர்த்து அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்களுக்கு நகராட்சி கடைகள் ஒப்படைக்கப்பட்டு, அவைகளுக்கு வாடகை நிர்ணயம் செய்யக் கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் அனுமதி பெற பிரேரணைகள் அனுப்பும்போது நகராட்சி பொறியாளரால் நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை தொகை சம்மந்தப்பட்ட மண்டல செயற்பொறியாளர் அவர்களால் சரி பார்க்கப்பட்டு, மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் மூலம் அனுப்பப்பட வேண்டும். அவ்வாறு அனுப்பப்படும் பிரேரணையின் மீது மட்டும் பரிசீலனை செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/– மா.ராஜகுமார்,
நகராட்சி நிர்வாக ஆணையருக்காக

பெறுநர்

அனைத்து நகராட்சி ஆணையர்கள்.
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.

நகல்

ஆர்2 – இருப்புக் கோப்பு